ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
Department of Examinations, Sri Lanka
NATIONAL EVALUATION AND TESTING SERVICE

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல
Pelawatta, Battaramulla.

මගේ අංකය / எமது இல / My No: 6/5/2022
ඔබේ අංකය / உமது இல / Your No: ..........
දිනය / திகதி / Date: 2022.07.11

දුරකථන / தொலைபேசி / Telephones: 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206,
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011-2785220
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS: තැ.පෙ. 1503, කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O.Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Internet Address: www.doenets.lk
E-mail : examd@sltnet.lk

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**பாடசாலைக்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை – 2022**

**விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளல்**

2022 நொவம்பர் மாதம் 27 ஆம் திகதி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களையும் பிரமாணங்களையும் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்கள் ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி **2022.07.29** ஆம் திகதி ஆகும்.

02. நிகழ்நிலை முறைமையில் (Online) மட்டும் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அதன் அச்சுப் பிரதியில் (Printout) வருமான மட்டம் தொடர்பாக விண்ணப்பதாரி, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பத்தைப் பெற்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

03. விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக பின்வரும் வழிமுறைகள் மூன்றில் ஒன்றைப் பின்பற்ற முடியும்.

- இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து "எமது சேவை" எனும் தலைப்பின் கீழுள்ள "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" எனும் உபதலைப்பை Click செய்க. அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" எனும் தலைப்பை Click செய்க. அல்லது
- https://onlineexams.gov.lk/eic எனும் இணைப்பை Click செய்து நுழைக.

3.1 கிடைக்கப்பெறும் window இல் தங்களுக்கு இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள School Code அல்லது Password ஐ உள்ளடக்கி முறைமைக்குள் பிரவேசிக்கவும்.

3.2 Grade Five Scholarship – 2022 - Student Registration (School) எனும் தலைப்பை தெரிவு செய்வதன் மூலம் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

04. இப்பரீட்சைக்காக நிகழ்நிலை முறைமையூடாக தரவுகளை உள்ளடக்கும்போது விண்ணப்பதாரருக்காக தங்களால் குறியீட்டு எண் (Unique Code) ஒன்று பின்வருமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள 5 இலக்கங்களையும் தொடர்ந்து மூன்று இலக்கங்களையும் (கீழே தரப்பட்டுள்ள உதாரணத்திற்கமைவாக) குறியீட்டு எண்ணை குறிப்பிடல் வேண்டும்.

உதா:- 1. பாடசாலை எண் 03001, விண்ணப்பம் தொடர் இலக்கம் 1 எனின் குறியீட்டு எண் : 03001001

2. பாடசாலை எண் 26001, விண்ணப்பம் தொடர் இலக்கம் 25 எனின் குறியீட்டு எண் : 26001025

05. பாடசாலை தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது அவசியமானதுடன் அதிபருடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு செல்லிடத்தொலைபேசி இலக்கத்தையும் பரீட்சைக்குப் பொறுப்பான ஆசிரியரது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட வேண்டுமென்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

06. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுகின்ற பிரமாணங்களுக்கமைய விண்ணப்பத்தை அனுப்பும் சமயத்திலே அரசாங்கப் பாடசாலைக்கோ அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக்கோ செல்லும் 5ம் தரத்தில் பயிலும் மாணவராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் மாணவர் உதவிப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர் 2023 ஜனவரி 31 ஆம் தினத்தில் 11 வயதுக்கு குறைந்த அல்லது 10 வயதுடைய அல்லது 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மட்டுமேயாகும்.

07. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வது மிகவும் சரியாக செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கும் இறுதித்தினத்தில் விண்ணப்பப்படிவத்தின் மென்பிரதியில் **குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை எக்காரணத்திற்காகவேனும் மாற்றஞ் செய்யலாகாது** என்பதால் முதற்தடவையிலேயே சரியாக பூர்த்தி செய்வது அதிபர்களதும் அல்லது ஆசிரியரதும் பொறுப்பாகும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

08. கடந்த முறை உங்கள் பாடசாலை விண்ணப்பதாரிகள் தோற்றவுள்ள பரீட்சை நிலையத்தை விட மிகவும் வசதியான நிலையமிருப்பின் அதனை மாற்றஞ் செய்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் ஒன்றை சமர்ப்பித்து அதன் பிரதியொன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும்.

அச்சுப்பிரதி செய்த இரு விண்ணப்பப்படிவங்களிலும் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்தி விண்ணப்பதாரிகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆகியோரின் கையொப்பங்களைப் பெற்று ஒரு பிரதியை பாடசாலையில் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு மற்றைய பிரதியை எனக்கு அனுப்பி வைக்கவும். அதில் **முழுப்பெயர், பிறந்த திகதி, மொழிமூலம், ஆண் / பெண் பால், வருமானம் ஆகிய சகல விவரங்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என சரிபார்த்து உறுதிப்படுத்துமாறு பெற்றோர் / பாதுகாலருக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.** சரியான விவரங்களை உள்ளடக்குவது சகல அதிபர்களினதும் முழுப்பொறுப்பாகும் என்பதுடன் பின்னர் அதனை மாற்றஞ் செய்யப்படலாகாது.

பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவப் பிரதியை அதிபர் உறுதிப்படுத்தல் வேண்டும். (உறுதிப்படுத்தும் முன்னர் சகல விவரங்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவாவென உறுதிப்படுத்தல் வேண்டும்).

உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதாயின் அவர்களுக்காக விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்காக இணைப்பில் (Link) வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விசேட கல்வித் தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக,

- இரத்மலானை கண்பார்வையற்றோர் பாடசாலை, இரத்மலானை
- பொலம்மாறுவ கண்பார்வையற்ற / செவிப்புலனற்றோர் பாடசாலை, தங்காலை

வேறு பொருத்தமான இடங்களிலும் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமாகையால் அந்நிலையத்தில் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட வேண்டுகோளொன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

பிரேல் மூலம் விடையளிக்கும் பார்வையற்ற பரீட்சார்த்திகள் இருப்பின் 'பிரேல் மூல பரீட்சார்த்தி' என பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக அச்சுப் பிரதி எடுத்த விண்ணப்பப்படிவத்தின் மேலே சிவப்பு மை பேனாவால் குறிப்பிடவும்.

09. பரீட்சார்த்தி ஒருவர் மாணவர் உதவிப் பணம் பெற எதிர்பார்த்திருப்பின் தகைமைகளுக்கு மேலதிகமாக அவரது பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் எல்லா வழிகளிலும் **வருடத்துக்கு ரூபா 180,000.00** அல்லது அதற்குக் குறைவான வருமானத்தை பெறுபவராயிருத்தல் வேண்டும். அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "சமூர்த்தி" வேலைத்திட்டத்தினால் பெறப்படும் உதவிப் பணம், வருமான எல்லையைக் கணிக்கும்போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இத் தகைமையை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்த மொத்த வருமானம் தொடர்பாக உங்களால் பிரதேச செயலாளருக்கு வருமானம் கூடவோ குறைவோ எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டு மீண்டும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களுக்கமைய செயற்படுவதோடு அவ் ஆவணத்தைப் பாதுப்பாக கோவைப்படுத்த வேண்டும். பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய மாணவர் உதவிப் பணம் பெறுவதற்கு தகைமை பெறின் மீண்டும் வருமானத்தை உறுதிப்படுத்தத் தேவையில்லை. **பெற்றோரின் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் வருமானத்தைப் பிழையின்றிக் குறிப்பிடுதல் பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.** இது தொடர்பாக வழங்கப்படும் வேண்டுகோள்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதனால் வருமான மட்டம் தொடர்பான தகவல்களை பெற்றோர் மூலம் உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

10. தற்போது தரம் 5இல் கற்கின்ற 2012.02.01 தொடக்கம் 2013.01.31 வரையுள்ள காலப்பகுதிக்குள் பிறந்த வருமானம் குறைந்த மாணவர்களுக்காக மட்டுமே என பெற்றோர், சட்டரீதியான பாதுகாவலர்களுக்கு முற்கூட்டியே அறியத்தரவும். இது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தாலோ கல்விச் செயலாளராலோ வெளியிடப்படும் நிபந்தனைகள் செல்லுபடியாகும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

11. தொழில்நுட்ப வசதிகள் அற்ற பாடசாலைகளுக்கு உரிய வலயக் கல்வி அலுவலகத்தின் ஊடாக அவ் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தகவல் தொழில்நுட்பப் பணிப்பாளருக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

12. மேற்படி விடயங்கள் தொடர்பாக மேலதிக விவரங்கள் பெற விரும்பின் கீழே தரப்படும் தொலைபேசி இலங்களூடாக தொடர்பு கொள்ளவும்.


தொலைபேசி இலக்கம் : 011-2784537 / 011-2786616 / 011-2784208
தொலைநகல் இலக்கம் : 011-2784422
மின்னஞ்சல் முகவரி : gr5schexam@gmail.com


எல்.எம்.டீ. தர்மசேன
பரீட்சை ஆணையாளர் நாயகம்

D:\New Volume\A\2022\Gr 5\Principal\instru.rtf